9th September 1959]

SRI A. R. SUBBIAH MUDALIAR : அந்த அந்த கிராமப் பஞ்சாயத்துக்கள் இதை எடுத்து நடத்தத் தயாராயிருக்கின்றன. அவர் களுக்கு இந்த உர வினியோகத்தை கொடுக்க சர்க்கார் ஆலோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது கிராமக் கூட்டுற வுச் சங்கங்கள், முக்கியமாக விவசாய பாங்குகள் ஆகியவைகளுக்கெல்லாம் இந்த உர வினியோகம் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பஞ்சாயத்துகளோ மற்றவர்களோ இதை எடுத்து நடத்தத் தயாராயிருந்தால் அவர்கள் கலெக்டர்களுக்கு மனுப்போடலாம்.

Buckingham Canal Improvement Scheme

* 251 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M.P. SARATHI) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் ஆண்டு மார்ச்சு மீ 23உ-ல் 959-வது கேள்விக்கு அளித்த பதிலையொட்டி பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் பற்றி மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி கிடைத்ததா ?

(ஆ) அப்படியானால், அந்த திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : நமது மாநிலத்திலுள்ள பக்கிங்ஹாம் கால்வாயைச் சீர்திருத்த முடியாது என்று மத்திய சர்க்கார் சொல்லி விட்டது உண்மையா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் பத்திரிகைச் செய்தியைப் பார்த்துவிட்டு இவ்வாறு கேட்கிறார் என்று நினைக்கிறேன். அவர்கள் எங்களுக்கு இன்னும் முடிவான பதில் தரவில்லை.

SRI S. PAKKIRISAMI PILLAI : பக்கிங்ஹாம் கால்வாயிலிருந்து எப்போதும் துர்நாற்றம் வந்து கொண்டிருக்கிறதே ! இதைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : இதை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. நகரத்தில் கழிவுநீர் அங்கே வந்துசேராதபடி செய்தால் இந்த துர்நாற்றத்தை நீக்கலாம்.

SRI K. VINAYAKAM : பக்கிங்ஹாம் கால்வாயை ஆழப்படுத்தி சீரமைப்பது ஒருவேளை அசாத்தியம் என்றாலும் இது சென்னையில் செல்லும் பகுதியை மாத்திரம் தூர்த்துவிட்டு அவ்வாறு தூர்த்த இடத்தில் மின்சார ரெயில் பாதை போடலாம் என்ற யோசனை இருக்கிறதே ! இந்த யோசனையை நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கம் முயற்சி செய்ததா ? இதைச் செய்தால் பிரயாண நெருக்கடி குறையும் என்று அரசாங்கம் நம்புகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : May I ask the Hon. Speaker how this is in order? 9-30 a.m.

MR. SPEAKER : The question before the House is whether sanction has been obtained from the Union Government for the Buckingham Canal Improvement Scheme. How is this supplementary question relevant to the main question?

SRI K. VINAYAKAM : Please hear me, Sir.

MR. SPEAKER : I need not hear. This is *prima facie* out of order.

[9th September 1959

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் அமைச்சர் அவர்கள் கார்ப்பொரேஷன் கழிவு நீர் விழுவதாகத் தெரிவித்தார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரி கழிவுநீர் விழுந்து ரொம்ப நாற்றம் அடிக்கிறது என்பதை கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அதை நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதனால் பேஸின் பிரிட்ஜில் நாற்றம் அடிக்காது.

THE HON. SRI P. KAKKAN : ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து கடைசியாக வந்து விழுகிறது. அதற்கு முன்பாக நகரசபையிலிருந்து விழுகிறது. எந்த நீரும் விழாமால் பார்த்துக்கொள்ளவேண்டும்.

SRI A. VEDARATHNAM : ஸார், மத்திய அரசாங்கம் நியமித்த வாட்டர்வேஸ் கமிஷன் தன்னுடைய ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்துவிட்டதா ? அதனுடைய ரிப்போர்ட்டின் பிரதி நமது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? இந்த பக்கிங்ஹாம் கெனலைப் பற்றி என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று தயவுசெய்து அறிவிப்பார்களா ?

MR. SPEAKER : அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லப் போகிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனியாக ஒரு கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Stage carriage permits

* 252 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவு முறையில் பஸ் பர்மிட் வாங்க சலுகைகள் உண்டா ?

(ஆ) மாஜி ராணுவத்தினருக்குத் தனியாக சலுகைகள் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Motor Vehicles Act provides that, other conditions being equal, an application for a stage carriage permit from a co-operative society shall be given preference over an application from an individual. Government have laid down certain principles and criteria to be followed by the authorities while considering applications for permits. According to it, a co-operative society will be entitled to one mark.

(*b*) No, Sir.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : With regard to question sub-section (*b*) may I know whether besides ex-servicemen there are also outsiders in the society?

T :1 HON. SRI V. RAMAIAH : If anyone organises the co-operative sciety and cmes for permit that co-operative society will be given preference by one mark apart from other marks given to it. I am not aware whether there are only ex-sevicemen or outsiders.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இந்த கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு இந்த மாதிரி ரூட்டுகளை கொடுக்கும்பொழுது தனி கவனத்தை செலுத்தவேண்டும் என்று சட்டத்தில் 56-ம் வருஷத்துச் சட்டத்தில் இருக்கிறது. இம்மாதிரி இருந்தும் ஜி.ஓ-வில் ஒரு மார்க் கொடுக்க வேண்டுமென்று போடுவது இரண்டுமுறை ஒரு சொஸைட்டிக்குச் சலுகை கொடுப்பது போல் இருக்கிறது. ஆகையால் இது ஜி.ஓ.-வில் இல்லாமல் இருக்கலாம் லிமிடெட் கம்பெனிக்கு எதற்காக தனியாக ஒரு மார்க் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?